ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=============================================================================

# பெருமாள் முருகன் புதினங்களில் பெண்களின் நிலை

திருமதி த.ஆனந்தவள்ளி
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு நடுவம்
டோக் பெருமாட்டி கல்லூரி மதுரை.

முனைவர்ஜெ. நிர்மலா தேவி,
ஆய்வு நெறியாளர், இணைப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி
கல்லூரி, மதுரை.

=============================================================================

ஆய்வுச்சுருக்கம்

ஆதியில் தீமையை வேரோடு அழிக்கும் பேராயுதமாகவும் வலிமை மிகுந்தவளாகவும் ஆக்கும் சக்தியாகவும் பெண் மதிக்கப்பட்டாள். தெய்வங்களுக்கும்நதிகளுக்கும்தேசங்களுக்கும் கூடப் பெண்களின் பெயரிட்டு வணங்கி வந்த தாய்வழிச் சமூகம் எப்போது தடம் புரண்டதோ அப்போதே பெண் உடைமைப் பொருளாக மாற்றப்பட்டாள். மதிப்பு, மரியாதை, சுதந்திரம், உரிமைகள் என எல்லாவற்றிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டாள். அன்றிலிருந்து இன்று வரை பெண்கள் அந்தப் படுகுழியிலிருந்து முழுதாக மீளவேயில்லை. தற்போது பெண்கள் பல துறைகளில் முன்னேறி இருந்தாலும் முழு சுதந்திரத்துடன் செயல்படுகிறார்களா என்றால் அது கேள்விக்குறி தான். பிறப்பதற்கு முன்பே கருச்சிதைவு@ தப்பிப் பிறந்து விட்டால் கள்ளிப்பால்@வளர்ந்து வருகையில் பாலியல் கொடுமைகள்@ திருமணத்திற்குப் பிறகு குடும்ப வன்முறைகள்@ அதற்குப்பின் குழந்தை பிறப்பதில் தாமதம் ஏற்பட்டாலோ அல்லது குழந்தை பிறக்கவில்லை என்றாலோ அதனால் ஏற்படும் அவமானங்கள் மற்றும் புறக்கணிப்புகள்@ இளம் வயதில் கைம்மை நிலை அடைந்து விட்டால் உடலளவிலும் மனதளவிலும் சமுதாயத்தால் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் எனப் பெண்கள் கருவில் உதித்தது முதல் கல்லறையில் உறங்கச் செல்வது வரை இச்சமூகத்தால் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், அவலங்கள், துயரங்கள் தாம் எத்தனை? எத்தனை? இவை அனைத்தும் கால மாற்றத்திற்கு ஏற்றவாறும் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்றவாறும் உருமாறிக் கொண்டு வருகிறதே தவிர அவை தவிர்க்கப்படவோ அல்லது தடுக்கப்படவோ இல்லை என்பதே உண்மை. இவ்வுண்மைகளைப் பெருமாள் முருகன் புதினங்கள் வழி இக்கட்டுரையானது ஆய்வு செய்கிறது.

திறவுச்சொற்கள்

பெருமாள் முருகன், புதினங்கள், பெண்களின் நிலை, கருச்சிதைவு, பெண்சிசுக் கொலை, பாலியல் வன்கொடுமை, குடும்ப வன்முறை, கைம்மை நிலை.

## முன்னுரை

பட்டாம் பு+ச்சியின் வாழ்க்கைச் சக்கரத்தைப் பார்த்திருப்போம். முட்டை, லார்வா, கூட்டுப்புழு, பிறகு தான் சிறகு முளைத்த பட்டாம் பு+ச்சி வண்ண வண்ணமாய்ப் பறந்து திரிகிறது. அதன் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் அதற்கு ஆபத்து உண்டு. அதையெல்லாம் தாண்டிப் பறந்து மகிழும். பட்டாம் பு+ச்சியான பின்னும் பல்லி போன்ற எதிரிகளின் கண்களில் படாமலும், பட்டாலும் அதன் வாய்க்கு எட்டாமலும் தப்பித்தால் தான் அதற்கு வாழ்க்கை உண்டு. ஒரு பெண்ணின் வாழ்க்கையும் இச்சமூகத்தைப் பொறுத்தவரை பட்டாம்பு+ச்சியை ஒத்தது தான். பிறப்பு முதல் இறப்பு வரை அவளை ஆபத்துகள் சூழந்து நிற்கின்றன.

சமுதாயத்தில் பெண்களின் நிலை மிகவும் இரங்கத்தக்கதாகவே உள்ளது. பெண்களை ஆண்கள், ஆண்டான் அடிமை என்ற நிலையிலேயே நடத்தி வருகிறார்கள். பெண் என்பவள் குழந்தைப் பருவத்தில் தந்தையின் பாதுகாப்பிலும், திருமணமான பின் கணவனின் ஆதரவிலும், முதுமைப் பருவத்தில் மகனின் உதவியிலும் வாழ வேண்டியவள் என இச்சமூகம் கருதுகிறது.

பெண்ணை ஓர் உடைமைப் பொருளாகவேநோக்கும் ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்கள் அடங்கியும் பல்வேறு இன்னல்களை அனுபவித்தும் வாழ்நாளைக் கடத்த வேண்டியுள்ளது. சமூகத்தின் ஓர் அங்கமான படைப்பாளிகள் தமது படைப்புகளில் பெண்களின் நிலையை எழுதிவருகின்றனர். அவர்களுள் பெருமாள் முருகனும் ஒருவர். அவர்தம் புதினங்கள்வழிப் பெண்கள் இச்சமூகத்தில் எதிர்கொள்ளும் சிக்கல்களை ஆராய்ந்து எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

ஆய்வுமுறை

பெருமாள் முருகன் புதினங்களில் பெண்கள் நிலை குறித்த இவ்வாய்வுக் கட்டுரை, பெண்மையச்சிந்தனையைப் பதிவுசெய்வதால் பெண்ணியத் திறனாய்வு அணுகுமுறை, பகுப்புமுறை மற்றும் விளக்கமுறை அணுகுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெண்களின் நிலை பற்றி அறிஞர்கள்

உலகம் முழுவதும் அறிஞர்கள் பலரும் பெண் விடுதலை குறித்துச் சிந்தித்துள்ளனர். “பெண்களின் பலவீனம் என்பது சமூக அமைப்பின் அடிப்படையிலேயே நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இதனைத் தகர்த்தெறிந்து அவர்கள் முன்னேற கல்வி கற்பதே சிறந்தது”(பெண்ணியம் சில தத்துவப் பிரிவுகள், ப.137)என்கிறார் மிதவாதப் பெண்ணியவாதி மேரி வோல்ஸ்ட்டோன் கிராப்ட்.

ஜான் ஸ்டூவர்ட்மில் என்ற அறிஞர், “பெண்ணிய ஒடுக்குதலுக்கு ஆண்களின் அரசியல் மேலாண்மையே அதி முக்கிய காரணம் என்றும், குடும்ப அமைப்பில் காணப்படும் ஆண் நாயகப் போக்கு ஒழிக்கப்பட வேண்டும் என்றும், அப்படி அதனை ஒழித்தால் தான் பெண்ணடிமைத்தனத்தை அடித்தளமாகக் கொண்ட சமுதாயத்தை வேரறுக்க இயலும் என்றும் கருதுகிறார்.”(பெண்ணியம் சில தத்துவப் பிரிவுகள், ப.137)

“உலகில் மனித வர்க்கத்திற்குள் அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டுமானால் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் ஒழிய வேண்டும்”(பெண்ணியம் சில தத்துவப் பிரிவுகள், ப.137) என்று பெரியாரும்,

“இன்று தமிழ் நாட்டில் மாத்திரமே யல்லாது
பு+மண்டல முழுவதிலும், பெண்ணைத்
தாழ்வாகவும் ஆணை மேலாகவும் கருதி
நடத்தும் முறை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு.
அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்@
அநீதிகளுக்கெல்லாம் கோட்டை@
கலியுகத்திற்குப் பிறப்பிடம்”(பாரதி வசனத் திரட்டு, ப.83)என்று பாரதியாரும் பெண் விடுதலை குறித்துச் சிந்தித்துள்ளனர்.

கருச்சிதைவு மற்றும் பெண் சிசுக்கொலை

ஒரு குழந்தை பெண்ணாகப்பிறந்துவிட்டால் பல்வேறு காரணங்களுக்காக (வறுமை, வரதட்சணை, ஆணாதிக்கச் சிந்தனை) பிறந்தவுடனே கொல்லப்படுவதைப் பெண் சிசுக் கொலை என்பர். ஆரம்பக் காலத்தில் அதிகளவில் நடைபெற்ற இப்பெண்சிசுக் கொலையானது நாகரிக வளர்ச்சி அடைந்த இன்றைய கால கட்டத்திலும் ஒழிந்தபாடில்லை. அங்கும் இங்குமாக மறைமுகமாக நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது.

அறிவியலின் வளர்ச்சி மனித மூளையில் நற்பண்புகளை அழித்து விட்டதன் அடையாளமாகக் கருவிலேயே குழந்தையைச் சோதிப்பதாகச் சொல்லி, அது பெண் குழந்தையாக இருந்தால் 5 அல்லது 6 மாதம் முடிந்த நிலையிலும் கூட கருக்கொலை, கருக்கலைப்பு போன்றவை நிகழ்ந்து கொண்டிருந்தன. இதனால் நாட்டில் ஆண்களின் எண்ணிக்கையைவிடப் பெண்களின் எண்ணிக்கை குறைந்தது. இதனைப் பெருமாள் முருகன்‘கங்கணம்’ புதினத்தில் பதிவு செய்திருக்கிறார். இப்புதினத்தில், “எங்க மாப்ள உருப்படுவம்? மொதக் கொழந்த பையனாப் பொறந்தாப் போதும். தப்பித்தவறி மொதல்ல பிள்ள பொறந்திட்டாத்தான் ரண்டாவது கொழந்தக்கி வெச்சிருக்கறோம். அது பையனாப் பொறந்தாச் சரி இல்லீன்னாப் போச்சு. இப்பத்தான் அஞ்சு மாசம் ஆன பொறவும் போயிப் பிள்ளையா பைனான்னு பாத்துக் கலச்சுப்புட்டு

*வந்தர்ராங்களே"(கங்கணம், ப.70) என்று மாரிமுத்துவுக்குப் பெண் பார்க்கும் தரகர் தாத்தா கூறுகிறார். இவ்வாறு பெண் பிள்ளைகளைக் கருவிலேயே கலைத்ததால்தான் அவனுக்குத் திருமணத்திற்குப் பெண் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது என்கிறார் அவர்.*

*மேலும் அதே புதினத்தில் "மாரிமுத்து"வின் மாமா அவனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்பதைக் குத்திக்காட்டிப் பேசுகிறார். அப்போது அவன் தன் சிறுவயதில் அவர் செய்த காரியத்தை நினைத்துப் பார்க்கிறான். அவருக்கு மூன்றாவது பெண் குழந்தை பிறந்து விடுகிறது. மூன்றாவது பெண் என்பதால்அதைக் கொன்று விடுகிறன்றனர். இவரைப் போன்ற ஆட்களால் தான் இன்று தனக்குப் பெண் கிடைக்கவில்லை என்று அவன் நினைத்துக் கொள்கிறான். "எல்லாம் மூன்று நாட்களோடு சரி. அடுத்த நாள் குழந்தை இறந்து விட்டது...... கட்டையனின் மாமியார் வேலை தான் அது என்பது எல்லோருக்கும் தெரியும். இழவுக்குப் போய் வந்த பாட்டி சிரித்துக் கொண்டே சொன்னாள். எல்லாம் அந்த ஆட்டூர்க்காரி வேலதான். பு+ங்கொழந்தைய கவுத்துப் போட்டுட்டா. மூச்சு முட்டிச் செத்துப் போயிருச்சு."(கங்கணம், பக்.179-180) கூடையை வைத்து அடைத்துக் கொல்வதும், பாலில் நெல்மணி போட்டுக் கொல்வதும் எனப் பெண் சிசுக்கொலை நடந்தேறிக் கொண்டிருந்தது. இவ்வாறாக, பெண்ணின்வாழ்வு அவள் பிறந்து சில மணி நேரத்துக்குள் பெண்சிசுக் கொலை என்ற பெயரிலும் கருவில் இருக்கும் போது கருச்சிதைவு என்ற பெயரிலும் அழிந்து வந்ததை ஆசிரியர் இப்புதினத்தில் காட்டியுள்ளார்.*

*ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, உசிலம்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெண் சிசுக்கொலை அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. தமிழ்நாடு முழுவதும் பரவலாகக் கருக்கொலை மற்றும் சிசுக்கொலை நடந்து கொண்டிருந்தது. அவற்றைத் தடுக்கவே மத்திய அரசால் 1994ஆம் ஆண்டு பிறப்பிற்கு முன்பே பாலினம் கண்டறிதல் தடைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தை மீறிச் செயல்படும் மருத்துவருக்கும், பெண்ணின் குடும்பத்திற்கும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அதன் பிறகு இதுபோன்ற கொலைகள் நேரடியாக நடப்பது தடைசெய்யப்பட்ட நிலையில் மறைமுகமாக நடைபெற்று வந்தது. தற்போது இது போன்ற செயல்கள் சட்டப்படித் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டு முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது என்று கூறினாலும் இந்தியாவில் கடந்த 1980 – 2010 வரை ஒரு கோடி கருக்கலைப்புகள் நடந்ததாக tamil.behindwoods.com(சிவசங்கரன் K, 20ஜனவரி 2023) என்னும் வலைத்தளம் மூலம் அறியமுடிகிறது. அண்மைக்கால யு+னிசெஃப் அறிக்கையின்படி இந்திய நாட்டில் 50 மில்லியன் சிறுமியரும், பெண்களும் பெண்பால் வேற்றுமையுணர்வு காரணமாகக் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 2000 பெண் சிசுக்கள் சட்டத்திற்குப் புறம்பாகக் கருவிலேயே கலைக்கப்படுவதாகவும் ஐக்கிய நாடுகள் கூறுகின்றன. இன்று வரை இதற்கு முழு முடிவு எட்டப்படவேயில்லை.*

*பாலியல் வன்கொடுமைகள்*

*பாலியல் வன்முறைகள் எனப்படுவது பாலியல் வன்புணர்வு, பாலியல் நோக்குடன் அடிமைப்படுத்துதல், கட்டாயப் பாலியல் தொழில், வலிந்துக் கர்ப்பமாக்குதல், கட்டாய இன விருத்தியை மேற்கொள்ளல், பாலியல் சார்ந்த கேலி, மிரட்டல், கட்டாயக் கருக்கலைப்பு எனப் பல வகைக் குற்றங்களை உள்ளடக்கியதாகும்.*

*பெண்ணைப் பாதிக்கும் பல காரணங்களில் முக்கியமான ஒன்று பாலியல் வன்முறையாகும். பெண்கள் குழந்தைப் பருவத்தில் இருந்தே பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். பள்ளி, கல்லூரி, பணி புரியும் இடம், பொது இடங்கள் மட்டுமின்றி குடும்பத்திற்குள்ளேயும் பாலியல் கொடுமைக்குப் பெண்கள் ஆளாகின்றனர். ஆய்விற்கு எடுத்துக் கொண்ட'பு+க்குழி', 'ஆளண்டாப்பட்சி'என்ற இரு புதினங்களிலும் பெண்களுக்கு நடக்கும் பாலியல் கொடுமைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.*

*'பு+க்குழி' புதினத்தில்சரோஜாவின் கணவனானகுமரேசனின் தம்பி வெள்ளையன் சரோஜாவைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கிறான். தன் விருப்பத்தை சாடையாகத்தெரிவித்துத் தன் ஆசைக்கு இணங்க வேண்டும் என்று கூறுகிறான். "நான் பாக்காங்காட்டி உன்னய அவன் பாத்திட்டான். எந்த நேரம்னாலும் கூப்புடு வந்தரன். நீ எனக்கு அண்ணம் பொண்டாட்டி தான். உன் நெறத்துக்கு நா பொருத்தமா இருப்பன். அவங்கிட்ட இருக்கறத உட எங்கிட்டக் காசு எச்சாவே இருக்குது எவ்வளவுன்னாலும் தர்றன்.அவளுக்குக்*

கட்டுப்படுத்த கட்டுப்படுத்த அழுகை பெருகியது. சத்தம் வராமல் அடக்கினாள்.''(பு+க்குழி, பக்.53-54) பணத்தால் பெண்ணைத் தன் வசப்படுத்தலாம்என்று கருதும் வெள்ளையனின் வக்கிரப் புத்தியையும் சரோஜாவின் அவல நிலையையும் அறிய முடிகிறது.

மேலும்'ஆளண்டாப்பட்சி' புதினத்தில்பெருமாவின் கணவன் வேலை நிமித்தமாக வெளியில் சென்றிருக்கிறான். அப்போதுஅவனுடைய அண்ணன் பெருமாவைப் பலவந்தமாக அடைய நினைக்கிறான். தன் சொந்தத் தம்பியின் மனைவி என்றும் பாராமல் அவளைப் பாலியல் கொடுமைக்கு ஆளாக்குகிறான். அதனை, ''உன்னயப் பாக்கத்தான் வந்தன்... என்று சொல்லிக் கொண்டே மார் இரண்டையும் அழுந்தப் பற்றிக் கொண்டார்.... கலியாணம் ஆயி வந்த நாள்லருந்து பாக்கறன் ஓடி ஓடி ஒளிஞ்சிக்கற. உம்மேல எனக்கு எத்தனை ஆச தெரியுமா? தம்பி பெண்டாட்டி தன் பெண்டாட்டி தானே என்று கிசுகிசுத்தான். அது வரை பிடியில் இருந்து விடுபட முயன்று கொண்டிருந்த பெருமா..... ச்சீ..... நாயே என்று ஆளைத் தள்ளி விட்டாள். குத்தீட்டியை எடுத்து அவர் காலில் வலுக்கொண்ட மட்டும் குத்தினாள்.''(ஆளண்டாப்பட்சி, பக்.94-95) பெண்ணின் பாதுகாப்பின்மையும்ஆணின் குரூர புத்தியும் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பெண்கள் அஞ்சாது துணிச்சலுடன் எதிர்க்க வேண்டும் என்று பெருமாவின் மூலம் ஆசிரியர் அறிவுறுத்துகிறார்.

மேற்கண்ட இரு புதினங்களிலுமே பாதிக்கப்படும் பெண்கள் யாரோ ஒருவரால் பாதிக்கப்படவில்லை. தம்குடும்பத்தைச் சார்ந்தவர்களாலேயே பாதிக்கப்படுவதைக் காணமுடிகிறது. அண்ணி என்பவள் அன்னைக்குச் சமமானவள்@ தம்பியின் மனைவி தங்கைக்கு நிகரானவள் என்று நினைப்பதை விடுத்து, இந்த ஆண்களின் எண்ணம், அண்ணன் பெண்டாட்டி அரைப் பெண்டாட்டி என்றும் தம்பி பெண்டாட்டி தன் பெண்டாட்டி என்றும் கருதுவதைப் புதினம் சுட்டிச் செல்கிறது. பெண்களுக்குத் தங்கள் சொந்த வீட்டிற்குள்ளேயே பாதுகாப்பு இல்லை. இது போன்ற செய்திகளுக்கு இன்றும் பஞ்சமில்லை. பெண் தன் தந்தையால் பாலியல் கொடுமைக்கு ஆளாவது, தன் சித்தப்பாவால் பாலியல் கொடுமைக்கு ஆளாவது, தன் தாத்தாவால் பாலியல் கொடுமைக்கு ஆளாவது என்று அத்துமீறிய உறவுகளின் நாசம் இன்றளவும் செய்தித்தாள்களில் இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

குடும்ப வன்முறை

குடும்ப வன்முறை என்பது ஒரு பெண் திருமணமாகிச் சென்ற வீட்டில் கூடுதல் வரதட்சணைக்காகத் துன்புறுத்தப்படுவது, குடி போதைக்கு அடிமையான கணவர் ஒருவர் மனைவியைச் சித்திரவதை செய்வது, குடும்பத் தேவைக்குப் பணம் கொடுக்காமலிருப்பது, பெண்களைச் சிறுமைப் படுத்தும் விதமாக ஆபாச வார்த்தைகளில் திட்டுவது, அவர்களின் மீது காட்டப்படும் வெறுக்கத்தக்க மனோபாவம், தாழ்வான அந்தஸ்து அளிப்பது போன்றவற்றில் வெளிப்படுகிறது.

''திருமணமானது பெண்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், இரசனைகள், இலட்சியங்கள் ஆகியவற்றை முழுமையாக மாற்றி விடுகிறது. இந்த மாற்றத்தின்போது அவள் பெரியஅழுத்தத்திற்குள்ளாகிறாள். குற்றம் காண்பது, கிண்டல் அடிப்பது, வீட்டு வேலை, சமைப்பது, குழந்தைகளை வளர்ப்பது, முதியோர்களைப் பராமரிப்பது போன்றவற்றில் பெண்களை ஆழ்த்துவது போன்றவை குடும்ப வன்முறையின் பல பரிமாணங்கள் ஆகும்''(பெண்களுக்கான சட்டங்கள், ப.35) என்று குடும்ப வன்முறைக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

'ஆளண்டாப்பட்சி' புதினத்தில்பெருமா, தன் கணவனின் அண்ணனால் பாலியல் கொடுமைக்கு ஆளாக நேர்ந்ததைத் தன் மாமியாரிடம் முறையிடச் செல்கிறாள். அப்போது அவள்மாமியார், ''என்னடா நடந்திருச்சுன்னு நடுராத்திரியில ஊடேறி வந்திட்டீங்க.... ஏதோ ஆசப்பட்டு வந்தான்னா அமுக்கமா உள்ள கூட்டிட்டுப் போயி எல போடறத உட்டுட்டு ஏறிக்கிட்டு வந்துட்டா''(ஆளண்டாப்பட்சி, ப.100) என்று, தன் மகனின் ஆசைக்கு இணங்க வேண்டியது தானே, இது ஒரு குற்றமா என்று நா கூசாமல் கொச்சை வார்த்தைகளால் அவளை அனைவரின் முன்னும் அவமானப்படுத்துகிறாள். மகன் செய்ததைத் தவறு என்று எண்ணாமல், பெண்ணைக் குற்றப்படுத்தும் பெருமாவின் மாமியாரால் பெண்ணேபெண்ணுக்கு எதிரியாகும் நிலையை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

*‘பு+க்குழி’ புதினத்தில் குமரேசன், சரோஜா என்ற பெண்ணைக் காதல் திருமணம் செய்து கொள்கிறான். இது பிடிக்காத குமரேசனின் தாயார், சரோஜாவைத் தன் மகன் வீட்டில் இல்லாத நேரம் பார்த்துக் கொலை செய்யத் துணிகிறாள். “பிள்ளப்பு+ச்சியாட்டம் இருந்த பையன எப்பிடி மாத்திப்புட்டா. அவனுக்காவத்தான் இத்தன நாளு பொறுத்திருந்தன். இல்லீன்னா கருக்கருவாள்ல கழுத்த அறுத்து அப்பவே கதைய முடிச்சிருப்பன்.”(பு+க்குழி, ப.144) பெண்ணே பெண்ணுக்கு எதிரியாக மாறுவது மட்டுமின்றி எமனாகவே மாறிவிட்ட வன்முறையின் உச்சத்தைப் ‘பு+க்குழி’ பதிவு செய்கிறது. பெண்கள் புகுந்த வீட்டில் உள்ள மாமியார், மாமனார் மற்றும் சில உறவினர்களால் உடளவிலும், மனதளவிலும் பாதிப்பிற்குள்ளாவதைத்தான் இவர்தம் புதினங்கள் இவ்வாறு விவரிக்கின்றன.*

*குழந்தையின்மையால் புறக்கணிப்பு*

*திருமணமானவுடனேயே பெண்ணுக்குக் குழந்தைப்பேறு கிடைக்கவில்லையெனில், அவள் தன் குடும்பத்தாராலும்உறவினராலும் சமுதாயத்தாலும் பல வகையில் துன்பப்படுத்தப்பட்டுப்புறக்கணிக்கப்படுகிறாள். அது மட்டுமின்றி ‘மலடி’, ‘வறடி’ என்ற அமங்கலப் பெயர்களால் அடையாளப்படுத்தப்பட்டு மங்கள காரியங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகிறாள்.*

*குழந்தை பெற்றுக் கொள்வதும், பெறாமலிருப்பதும் ஒரு பெண்ணின் தனிப்பட்ட உரிமை ஆகும். அதை மாபெரும் குறையாக எண்ணி அந்தப் பெண்ணைவசை பாடுவதும், புறக்கணிப்பதும் இன்றளவும் சமுதாயத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. இதைப் பெருமாள் முருகனின் புதினங்களும் படம் பிடித்துக் காட்டியுள்ளன. ‘மாதொருபாகன்’ புதினத்தில் பொன்னாயிக்குத் திருமணமாகிப் பல ஆண்டுகளாகியும் குழந்தையில்லை. அதனால் பலரும்பேசுகின்ற பலவிதமான பேச்சுகளால் அவள் மனவுளைச்சலுக்கு ஆளாகின்றாள். ஒரு நாள்பெருமாவின் பக்கத்து வீட்டுப் பெண் தன் குழந்தையை அவளிடம் விட்டு விட்டு வெளியில் சென்று விடுகிறாள். அந்தக் குழந்தை விளையாடிக் கொண்டிருக்கையில் தானாகக் கீழே விழுந்து தலையில் அடிபட்டு இரத்தம் வந்து விட்டது. அவளை அறியாமல் நடந்த இந்த செயலுக்கு அந்த பெண்பொன்னாயியின் மனம் புண்படும்படிப் பேசுகிறாள். “பிள்ளப் பெத்திருந்தாதான்ன அரும தெரியும். பையன் மண்ட ஒடஞ்சு ரத்தம் கொட்டறஅளவுக்கு உட்ருக்க. பிள்ளப் பெத்த எந்த பொம்பளயாச்சும் இப்பிடி உடுவாளா?”(மாதொருபாகன், ப.59)*

*அதே புதினத்தில்பொன்னா தான் அத்தை முறையாகும் ஒரு பெண்ணின் சடங்கிற்குச் செல்கிறாள். அத்தை முறை செய்வதற்காக அவள் அருகில் செல்லும்போதுதடுக்கப்படுகிறாள். “முந்தானையைச் செருகிக் கொண்டு போய் நின்ற போது, நீ அந்தப்பக்கம் தள்ளியிரு என்ற தாய்மாமன் பெண்டாட்டி கையைப் பிடித்திழுத்துப் பின்னால் தள்ளி விட்டாள். பிள்ளைப் பெறாதவள் சோறு சுற்றினால் அந்தப் பெண்ணுக்குமா குழந்தை இல்லாமல் போய்விடும்? இது கூட அமங்கலமா?”(மாதொருபாகன், ப.96) சுபகாரியம் நடக்கும் இடங்களில் வரும் பேச்சுகளால் குழந்தைப்பேறில்லாப் பெண் அனுபவிக்கும் மன வேதனையையும் அவர்கள் நல்ல காரியம், கெட்ட காரியம் என எதிலும் கலந்து கொள்ள இயலாமல் ஒதுக்கி வைக்கப்படும் புறக்கணிப்பு நிலையையும் இங்கே காணமுடிகிறது. இது போன்ற மூடநம்பிக்கை,நாகரிகம் அதிவேகத்தில் வளர்ந்துள்ள இந்தக் காலத்திலும் சிறிதளவேனும் குறைந்தபாடில்லை. குழந்தைப்பேறில்லாப் பெண்கள் இன்றளவும் ஒரு அபசகுனக் குறியீடாகவே இச்சமூகத்தால் பார்க்கப்படுகின்றனர்.*

*இவ்வாறு பல வகையிலும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளான பொன்னாவும் அவள் கணவனும் மனவுளைச்சலுக்கு ஆளாகின்றனர். இவற்றிலிருந்து தப்பிக்க வேண்டுமெனில் தனக்கு எவ்வாறாவது குழந்தைப்பேறு கிட்டவேண்டுமென்று நினைத்த பொன்னா தவறான வழியைத் தேடுகின்றாள். அதனால் அவள் கணவன் தற்கொலையை நாடுகின்றான்.*

*கைம்மை நிலை*

*கணவனை இழந்தபெண்ணைக் கைம்பெண் என்றும்விதவை என்றும் கூறுவர். மனைவி இறந்த பின் கணவன் புதுமாப்பிள்ளை என்ற வாக்கிற்கேற்ப மனைவி இறந்த பின் நரை முடியும் குழி விழுந்த கன்னங்களும் கொண்ட படுகிழவனும் கூடப் பருவப் பெண்ணொருத்தியைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வான். ஆனால் பெண்ணோ மரக்கட்டையை விட மட்டமாக*

மதிக்கப்படுவதுடன் மஞ்சள், குங்குமம், பொட்டு இவற்றை இழந்து மற்றவர்களால் தீக்குறியாகக் கருதப்படுவாள்.

"மனைவி இறந்த பின் வயதான தாத்தாவும்
மறு மணம் பண்ணிக்கிட உரிமையுண்டு – இளம்
மங்கையை முடிப்பதுண்டு, மண்டை வறண்டு – தன்
கணவனை இழந்தவள் கட்டழகியானாலும்
கடைசியில் சாக மட்டும் உரிமையுண்டு."(தேனருவி, ப.148)என்று இக்கருத்தைப் பாரதிதாசனின் பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றன.

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட புதினங்களிலும் கைம்பெண்களாய் வாழ்ந்த மகளிர் அனுபவித்த துன்பநிலை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. 'அர்த்தநாரி' புதினத்தில்காளியின் தாய் இளம் வயதிலேயே தன் கணவனை இழந்து விடுகிறாள். குழந்தையுடன் தனியாக வாழ்ந்த அவளுக்கு இந்த ஆணினம் பல்வேறு இன்னல்களையும் இழைக்கின்றது. "எனக்குந்தான் எத்தனக் கஷ்டம் வந்திருக்கும் தெரிமா? நீ வளந்து ஆளாவற வரைக்கும் கொஞ்சக் கஷ்டமா பட்டிருப்பன்... ராத்திரியானாப் போதும் கதவ வந்து தட்டறதும் ஊட்டு மேல கல்ல எடுத்துப் போடறதும் கத்திக் கூப்படறதுமின்னு இந்த ஊரு சும்மாவா இருந்திச்சு... நம்மளுக்கு ஒன்னு இருக்குதே இதுக்கு எந்தச் சங்கடமும் வந்தரக் கூடாதேன்னு தான் நான் வைராக்கியமா இருந்தன் பாத்துக்க"(அர்த்தநாரி, ப.32) சிறு வயதில் விதவையாகும் பெண்கள் பாதுகாப்பில்லாமல் படும் துயரினை இங்கு காணமுடிகிறது.

'மாதொருபாகன்' புதினத்தில்கணவனை இழந்த பெண் தன் பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்க மாட்டாள் என்று இச்சமுதாயம் கருதுகிறது."சிறுவயது முதலே அம்மா வளர்ப்பு, அதனால், முண்டை வளர்த்த பிள்ளை தண்டமாகத்தான் போகும் என்று யாரும்ஒரு வார்த்தை சொல்லிடக்கூடாது என்பதில் கவனம் கொண்டிருப்பாள். எல்லோருக்கும் சமமாகத் தாங்களும் நிற்க வேண்டும் என்று பிடிவாதம். எதற்கும் ஒருவரை அண்டியிருக்கக்கூடாது என்பாள்."(மாதொருபாகன், ப.16) எனவே கணவன் இறந்த பிறகு ஒரு பெண் தனியாளாக இச்சமூகத்தில் இன்னல்களையும் புறக்கணிப்புகளையும் பொறுத்துக் கொண்டு தன் குழந்தை ஒன்றை மட்டுமே வாழ்வின் பிடிமானமாகக் கொண்டு வைராக்கியமாக ஒழுக்கத்துடன் வாழ்ந்து வாழ்வில் உயர்ந்து காட்டும் நிலையை இப்புதினங்கள் பதிவு செய்துள்ளன.

## தொகுப்புரை

பெண்கள் கருவறை முதல் கல்லறை வரை கருச்சிதைவு, பெண்சிசுக்கொலை, வரதட்சணை, பாதுகாப்பின்மை, பாலியல் வன்கொடுமை, எதிர்ப்பு, புறக்கணிப்பு, சுதந்திரமின்மை, சமத்துவமின்மை, உரிமை மறுப்பு என்று பல்வேறு தடங்கல்களைத் தாங்கியும், தாண்டியும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பெண்களுடைய பலவீனத்திற்குக் காரணம் ஆண் சமூகம் கட்டமைத்திருக்கும் சமுதாயமே என்று சான்றோர் பலர் கூறி, பெண்களை அதை விட்டு வெளியே வருமாறு வலியுறுத்துகின்றனர். கருவிலேயேபெண் குழந்தையென அறிந்தவுடன் கருவைச் சிதைப்பதும், பிறந்த பின் சிசுக்கொலை செய்வதும் எனப் பிறந்த மண்ணின் வாசனையையும், தாய்ப்பாலின் சுவையையும் அறியும் முன்பே பலி கொடுக்கப்படும் நிலையைப் பெருமாள் முருகனின் புதினங்கள் பதிவுசெய்துள்ளன.பெண்கள் தன் குடும்பத்தினர்களாலேயே பாலியல் வன்முறைக்கு உள்ளாகும் கொடூரத்தை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். 'ஆளண்டாப்பட்சி' புதினத்தில் இடம்பெற்றுள்ள பெருமாவைப் போலப் பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் துணிச்சலுடன் எதிர்த்துப் போராட வேண்டும். பெரும்பாலும் திருமணமான பெண்கள் மாமியார், கணவன் எனப் புகுந்த வீட்டினரால் குடும்ப வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றனர். பெண்ணே பெண்ணுக்கு எதிரியாகும் நிலையை இக்கட்டுரை எடுத்துக்காட்டியுள்ளது. குழந்தையில்லாத ஒரு பெண்ணை அவளுடைய குடும்பத்தினரும், உறவினரும், சமூகத்தினரும் விஷப் பாம்பின் நாக்குகளாய் கொத்திப் பிடுங்குகின்றனர் என்ற நடப்பியல் உண்மையை 'மாதொருபாகன்' புதினம் காட்டுகிறது. கணவனை இழந்த கைம்பெண்களுடைய பாதுகாப்பற்ற நிலையையும் குழந்தையை வளர்க்க அவர்கள் படும் துன்பத்தையும்'அர்த்தநாரி', 'மாதொருபாகன்'ஆகிய புதினங்களில் காணமுடிகிறது. எனவே பெண்களுக்குப் பிரச்சினைகள் இன்னவென்று சொல்ல முடியாத அளவில் இச்சமூகத்தில் பரந்து விரிந்து காணப்படுகின்றன. இவற்றை எதிர் கொண்டு

துணிச்சலுடன் வாழப் பெண்கள் தங்கள் உரிமைகளை அறிய வேண்டும். அதை விட்டுக் கொடுக்காமல் சமூகத்தின் முன் நின்று வாழ்ந்து காட்ட வேண்டும். பெருமாள் முருகனின் புதினங்களில் இடம்பெற்றுள்ள பெருமா, காளியின் தாய் போன்ற கதைமாந்தர்கள் இதனை உணர்த்துகின்றனர்.

துணைநூல்கள்


1. காந்திமதி,அ. (மொ.ஆ.) *பெண்களுக்கான சட்டங்கள்.* உலகத் தோழமை மையம் வெளியீடு, செகந்திராபாத், ஆண்டு இல்லை.
2. சாலமன், சித்து. *பெண்ணியம் சில தத்துவப் பிரிவுகள்.* அமலி அச்சகம், மதுரை,முதற்பதிப்பு-1999.
3. தூரன், பெ. (தொ.ஆ.) *பாரதி தமிழ் வசனத் திரட்டு.* நேஷனல்புக் டிரஸ்ட் பிரைவேட் லிமிடெட், புதுடில்லி, முதற்பதிப்பு - 1978.
4. பாரதிதாசன். *தேனருவி.* பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி, முதற்பதிப்பு-1956.
5. பெருமாள் முருகன். *அர்த்தநாரி.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ். நாகர்கோவில், முதற்பதிப்பு-2014.
6. பெருமாள் முருகன். *ஆளண்டாப்பட்சி.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், நான்காம் பதிப்பு-2019.
7. பெருமாள் முருகன். *கங்கணம்.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், மூன்றாம் பதிப்பு-2017.
8. பெருமாள் முருகன். *பூக்குழி.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், முதற்பதிப்பு - 2013.
9. பெருமாள் முருகன். *மாதொருபாகன்.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், முதற்பதிப்பு-2010.
10. சிவசங்கரன்,K. *கருவில் இருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? கண்டறிய உதவிய மருத்துவமனை உரிமையாளர் கைது – நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு.* 20 ஜனவரி 2021, https://m.behindwoods.com/ta/amp/news-shots-tamil-news/tamilnadu/hospital-owner-arrested-for-scanning-and-finding-babys-sex.html, அணுகிய நாள் 15 ஜுன் 2023.


********* ********* ********** ********* ********* ********** ********** **********